# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness – PW23

| | | | |
|---|---|---|---|
| Name | : சாலி | Caste | : |
| W/o. | : குமார் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 29.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A2 present. A1 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் சூளகிரியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர், ராமசந்திரனின் லாரியில் கிளினராக வேலை பார்த்து வந்தார். 2014ம் வருடம் சம்பவம் நடப்பதற்கு 3 நாட்கள் முன்னர் தான் மேற்படி லாரியில் கிளினராக செல்வதாக சொல்லிவிட்டு எனது கணவர் சென்றார். பின்னர் திங்கள்கிழமை அன்று சுமார் 11 மணி அளவில் சூளகிரி காவல்நிலையத்திற்கு போலிசார் எனது வீட்டிற்கு வந்தார்கள். போலிசார் வந்து எனது கணவர் விபத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். உடனே நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு

வந்தேன். என் கணவரை பார்த்தபோது அவருகது தலையின்பின் புறம் அடிபட்டிருந்தது. அவர் இறந்து கிடந்தார். நான் அவருடைய பிரேதத்தை சூளகிரிக்கு கொண்டு சென்றோம். போலிசார் என் கணவரின் பிரேதத்தை வைத்து என்னை விசாரித்தார்கள்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

எனது கணவர் மார்கெட்டில் அன்றன்று எந்த லாரியில் கிளினராக கூப்பிடுகிறார்களோ அந்த லாரியில் கிளினராக செல்வார் என்றால் சரி. சம்பவத்தன்று என் கணவர் சென்ற லாரியை ஓட்டிய ஓட்டுனரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. என் கணவர் லாரி ஓனர் கூப்பிட்டு அவரிடம் கிளினராக வேலை பார்க்கவில்லை என்றால் சரி.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,

Principal Sessions Judge, Salem.